NHG Polyclinics
NHG Health

# பற்காரை நீக்கம் & மமருகூட்டலுக்குப் பிந்திய குறிப்புகள்

**[Post Scaling and Polishing Education]**

## பற்காரை நீக்கம் & மெருகூட்டலுக்குப் பிறகு,

•உங்களது ஈறு நோயின் கடுமையைப் பொறுத்து, அடுத்த 24 மணி நேரத்திற்கு, உங்களுக்கு சிறிது இரத்தப்போக்கு இருக்கலாம்.

•இரத்தப்போக்கு இருந்தால், வாயை நீங்கள் அடிக்கடி கொப்பளித்துக்கொண்டே இருக்கக் கூடாது. இது இரத்தம் சரிவர உறைவதைத் தடுத்துவிடும்.

## நீங்கள் செய்ய வேண்டியவை...

- வழக்கம்போல் பல் துலக்குங்கள் மற்றும் பல் நார் பயன்படுத்துங்கள். எனினும், உங்களுக்கு இப்போதுதான் பற்காரை நீக்கப்பட்டிருந்தால், ஈறுகளின் அருகே பல் துலக்கும்போது சிறிது வலி மற்றும்/அல்லது இரத்தப்போக்கு உணரப்படலாம். பற்காரை நீக்கப்பட்ட பிறகு, குளிர்ந்த பொருட்களுக்கு பற்கள் கூசலாம். இக்கூச்சத்தைக் குறைப்பதற்கு, கூச்ச நீக்கி பற்பசையை முதல் சில நாட்களுக்குப் பயன்படுத்துங்கள்.

- அடுத்த வேளை உணவுக்கு மிருதுவான உணவுகளையே தேர்ந்தெடுங்கள் (எ.கா. கஞ்சி, சூப் வகைகள், அல்லது தானிய உணவுகள்). அடுத்த சில நாட்களில் உங்களால் வழக்கம்போல் சாப்பிட ஆரம்பிக்க முடியும்.

- பற்காரை நீக்கம், மெருகூட்டல் போன்ற சிகிச்சைகள், ஈறு நோய் மற்றும் இதர வாய்ச் சுகாதாரப் பிரச்சனைகள் வருவதைத் தடுக்க உதவுகின்றன என்பதால், இவற்றை வழக்கமாக மீண்டும் இங்கே வந்து பெற்றுக்கொள்ள மறக்காதீர்கள்.

NHG Polyclinics
NHG Health

## உங்கள் தகவலுக்கு…

உங்களுக்கு அளவுக்கு மீறிய இரத்தப்போக்கு இருந்தால் (48 மணி நேரத்திற்கு மேல்), தயவு செய்து நாங்கள் திறந்திருக்கும் நேரத்தில் மீண்டும் எங்கள் பல் மருந்தகத்திற்கு வாருங்கள், அல்லது என்ஹெச்ஜி பலதுறை மருந்தக தொலைபேசி மையத்தை 6355 3000 என்ற எண்ணில் அழைத்து எங்கள் பல் மருந்தகத்தைக் கலந்தாலோசியுங்கள்.

எங்கள் பல் மருந்தகம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணி – மதியம் 1 மணி & பிற்பகல் 2 மணி – மாலை 4.30 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் காலை 8 மணி – மதியம் 12.30 மணி வரையிலும் திறந்திருக்கும்.

ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாட்களில் மூடப்பட்டிருக்கும்.

கடைசிப் பதிவு

| | | |
|---|---|---|
| திங்கள் – வெள்ளி | : | மதியம் 12 மணி (காலைத் தொடர்) |
| | : | மாலை 4 மணி (பிற்பகல் தொடர்) |
| சனிக்கிழமை | : | மதியம் 12 மணி |

மருந்தகத் திறப்பு நேரத்திற்குப் பிறகு என்றால், அன்பு கூர்ந்து பின்வரும் மருத்துவமனைகளின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை அணுகவும்:

- கூ டெக் புவாட் மருத்துவமனை: 6555 8000
- சிங்கப்பூர் பொது மருத்துவமனை: 6222 3322
- தேசிய பல்கலைக்கழக மருத்துவமனை: 6779 5555



© National Healthcare Group Polyclinics Pte Ltd 2025. All rights reserved. All information correct as of Sep 2025. No part of this document may be reproduced, copied, reverse compiled, adapted, distributed, commercially exploited, displayed or stored in a database, retrieval system or transmitted in any form without prior permission of National Healthcare Group Polyclinics Pte Ltd. All information and material found in this document are for purposes of information only and are not meant to substitute any advice provided by your own physician or other medical professionals.